Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் 17-**ம்** தேதி**வெள்ளிக்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 6-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | கொத்தனார்வேலை |
| பெயர். | - | சக்திவேல் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | கண்ணன் | சமயம் | - | - |
| கிராமம் | - | வீரபாண்டி | வயது | - | 42 |

17.07.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை

1. நான் தற்போது வீரபாண்டியில் வசித்து கொத்தனார்வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு சேகருக்கும், இன்னொருத்தருக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. . **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சிகையெழுத்து அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** . போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

கடந்த 29.12.2020 ந் தேதி 15.00 மணியளவில் போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றாலும் அவரது விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

Digitally signed by
SENTHILKUMAR
Date: 2026.07.17 15:48:12 +0530

**D.M-cum-JM,**
**T.V.Nallur.**

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் 17-**ம்** தேதி**வெள்ளிக்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 7-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | ஜல்லிவேலை |
| பெயர். | - | சூர்யா | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | சுப்பிரமணி | சமயம் | - | - |
| கிராமம் | - | வீரபாண்டி | வயது | - | 24 |

17.07.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வீரபாண்டியில் வசித்து ஜல்லி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1 யை தெரியும். அ.சா.1 எனது அம்மா. கடந்த 6 வருடத்திற்கு முன்பு மாலை நேரத்தில் எங்களுக்கு சொந்தமான மாடு எதிரியின் நிலத்தில் மேந்ததால் எதிரிகள் எங்களது மாட்டை பிடித்துவைத்திருந்தார்கள். அந்த மாட்டை அவிழ்ப்பதற்காக எனது அம்மா சென்றார் அப்போது எதிரி சேகர் கல்லால் எனது அம்மாவின் தலையில் அடித்தார்.

2. அதைக் கேட்க சென்ற எனது அண்ணன் பார்த்திபனை எதிரிகள் அடித்தார்கள். நான் சத்தம் கேட்டு அங்குசென்றுபார்த்தபோது எனது அண்ணனுக்கும், எனது அம்மாவுக்கும் காயம் ஏற்பட்டிருந்தது- இருவரையும் வீரபாண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்னர்

மேல்சிகிச்சைக்காக எனது அம்மாவை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். போலீசார் விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.07.17 15:48:22 +0530

**D.M-cum-JM,**

**T.V.Nallur.**